அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 7/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7.
29 பெப்ருவரி, 1988.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

<u>விடுமுறை வங்களாக்கள்</u>

<u>தாபனக் கோவை - அத்தியாயம்</u>

1. 1.1, 1.2, 1.3 ஆகிய பிரிவுகளை நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலிடு செய்க.

"1.1 புகையிரத நிலையத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள நுவரெலிய அரசாங்க வங்களா வருடமொன்றுக்கு ரூ.24,000/-க்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கக் கூடியது.

1.2 தியதலாவையில் புகையிரத பாதைக்கு அருகே சற்று உயர அமைந்துள்ள இரண்டு அரசாங்க வங்களாக்கள், இவற்றுள் அளவில் பெரியது வங்களா 'அ' இது வருடமொன்றுக்கு ரூ.24,000/-க்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கக் கூடியது.

அப்புத்தளை வீதியருகே அமைந்துள்ள வங்களா 'ஆ' வருடமொன்றுக்கு ரூ.24000க்கு குறைவான சம்பளம் பெறும் உத்தியோகத்தருக்குக் கிடைக்கக் கூடியது.

1.3 பண்டாரவளையில் பிந்துனுவெவ வீதியிலுள்ள அரசாங்க வங்களா வருடமொன்றுக்கு ரூ.24000க்குக் குறைவான சம்பளம் பெறும் உத்தியோகத்தருக்குக் கிடைக்கக் கூடியது.

2. 6.1 ஆம் பிரிவை நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலிடு செய்க.

"6.1 விடுமுறை வங்களாக்களில் வாசம் செய்வதற்குக் கொடுக்க வேண்டிய வாடகை வருமாறு:-

| | <u>நாளாந்த வீதம்</u> |
|---|---|
| | ரூ: ச |
| நுவரெலிய | 60.00 |
| தியதலாவ 'அ' | 60.00 |
| தியதலாவ 'ஆ' | 50.00 |
| பண்டாரவளை | 50.00 |

வங்களாக்களில் வசிப்போர் வங்களாக்களுக்குச் சொந்தமானதும் தம்மால் உபயோகப்படுத்தப்பட்டவையுமான தூங்கும் அறை சலவை செய்வதற்கான செலவினையும் வாசகாலத்தில் பயன்படுத்தும் மின்சாரச் செலவினையும் செலுத்துதல் வேண்டும்

3. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 01-04-1988ஆம் திகதி முதல் செயற்படும். தாபனக் கோவைக்கான உரிய திருத்தங்கள் நாளடைவில் வெளியிடப்படும்.

ஒப்பம்: டீ. பி. ஜே. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.